# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்:மூன்று கணை: இருபத்துநான்கு ஏப்ரல் -2023



சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.



**தொடர்புகளுக்கு**
guruseththiram@gmail.com


## உள்ளே


1 ஆசிரியரின் உள்ளத்திலிருந்து
2 காட்சியும் கருத்தும்
3 Blended Learning கலவைக்கற்றல் 2
5 என் ஆசான்
6 மனிதனை மனிதன் இழிவு படுத்தும் அவலநிலை அற்ற சமூகத்தை உருவாக்குவோம்
7 கல்வி
8 Big Five Pesonality Test 1
10 ஆசிரியர் தலைமைத்துவம்
11 வன்முறையற்ற தொடர்பாடல்
11 அடையத்துடிக்காதே குறிக்கோளாக்கி முயற்சி
12 “இன்பா”வின் சிந்தனைத் தொடர்கள் -- 15
13 பல்துறைகளில் இவள் முதல் பெண்
16 ஆசிரியரின் வகைகள்
18 எனது மகள் உயிரோடு இருப்பதை விட மரணிப்பதே நல்லது 3
19 மனிதம்
20 Check your self
21 பேசும் படங்கள்...!




குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!


குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...

குருசேத்திரம் கணை 24 சஞ்சிகைக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதில் மகிழ்சியடைகின்றேன். இன்றைய ஆசிரிய தலையங்கத்தில் அண்மையில் யுனிசெப் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் (2023 March) குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை வாசிப்புத்திறன் மற்றும் அடிப்படை எண்ணறிவு தொடர்பான அடைவுபற்றி ஆசிரிய கல்வித்துறையில் உள்ள ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய நிலையிலுள்ளோம்.




சமகால கல்விப்புலத்தில் வாசித்து கிரகித்து கருத்து ருவாக்கம் செய்வதற்குப்பதிலாக தகவல்களின் அடிப்படையில் அல்லது சுருக்கக்குறிப்புகளின் அடிப்படையில் கருத்துருவாக்கம் செய்து பரீட்சை க்கு விடையளிக்கும் மேற்பரப்பு வாசிப்பு பழக்கம் கொண்டவர்களாக அதிகமானோர் காணப்படுகின்றனர். இதனால் பரீட்சையில் வெற்றிபெற்றாலும்




வாழ்க்கையில் பல சவால்களை சந்திக்கின்ற இளம் சமுதாயத்தினரை காணக்கூடியதாகவுள்ளது.


மாணவ ஆசிரியர்களாகிய நாம் நல்ல நூல்களை வாசிப்பதன்மூலம் சிந்தனை விருத்தியை விசாலமாக்கிக் கொள்வதுடன் எமது பட்டறிவு அனுபவங்களை எதிர்கால மாணவர்களுக்கு எடுத்துச்சென்று வாசிப்புப் பழக்கமுள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்குவோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

# காட்சியும் கருத்தும்

திரு. சு. பரமானந்தம்






**"குருசேத்திரம்"** மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது. **குருசேத்திரம் உங்களின் களம்...**


அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

✉ guruseththiram@gmail.com

# Blended Learning கலவைக்கற்றல்

2

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




கலவைக் கற்றல், ஆசிரியர்களுக்கு முழு வகுப்புப் பாடங்களை வழங்குவதற்கும் குறைவான நேரத்தைச் செலவிடவும், மாணவர்களுடன் தனித் தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ அதிக நேரத்தைச் சந்தித்து, குறிப்பிட்ட கருத்துகள், திறன்கள், கேள்விகள் அல்லது கற்றல் பிரச்சினைகளுக்கு உதவலாம். கலவைக் கற்றல், பாடசாலைகளுக்கு குறைந்த செலவில் அதிக திறமையுடன் அதிக மாணவர்களுக்கு கற்பிக்கவும், உயர்கல்வியின் விடயத்தில் மாணவர்களை அதிகளவில் அனுமதிக்கவும் கூடும்.

மாணவர்கள் எண்மிய மற்றும் நிகழ்நிலை தொழில்நுட்பங்களை கலவை-கற்றல் சூழ்நிலைகளில் பயன்படுத்த வேண்டியிருப்பதால், அவர்கள் இயற்கையாகவே புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக தொழில்நுட்ப கல்வியறிவு மற்றும் அதிக நம்பிக்கையைப் பெறுகிறார்கள். கலவை-கற்றல் அணுகுமுறை நவீன மயப்படுத்தப்பட்ட வகுப்பறைகளில் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதாக குறிப்பிடுகின்றனர். இதில் கற்பவர்கள் குறிப்பிட்ட நோக்கங்களைச் அல்லது இலக்குகளை அடைய பெரும்பாலும் சுயமாகவே முயற்சி செய்யலாம், அவ்வப்போது தங்கள் ஆசிரியரிடம் அல்லது வழிகாட்டியிடம் இற்றைப்படுத்தல்களை அல்லது உதவியை நாடலாம். இந்த விஷயத்தில், மாணவர்கள் வயது வந்த வாழ்க்கையில் அவர்களுக்குத் தேவைப்படும் சுய ஒழுக்கம், சுய-உந்துதல் மற்றும் கல்விநிறுவனம் சார் கலாசாரங்களையும் பழக்க வழக்கங்கள் போன்ற திறன்களையும் கற்றுக்கொள்வார்கள்.

பொதுவாக, எண்மிய மற்றும் நிகழ்நிலைக் கற்றல் (மற்றும் அதன் பல மாறுபாடுகள்) பற்றிய சந்தேகம் பரவலாக உள்ளது, குறைந்தபட்சம் பல தொழில்நுட்ப இணைப்பாக்கம் செய்யப்பட்ட கல்வி நடைமுறைகள் இன்னும் ஆய்வுக்குள்ளாக்கப்படவில்லை, மேலும் அவற்றின் கல்வி பயன்பாடு மற்றும் மதிப்பு கேள்விக்குரியதாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, நிகழ்நிலைக் கற்றலுக்கு எதிராக முன்வைக்கப்படும் ஒரு பொதுவான வாதம் என்னவென்றால், மாணவர்களுக்கு ஆழமான மற்றும் அர்த்தமுள்ள கற்றலுக்கு இட்டுச் செல்லும் பேரறிவுச் சிந்தனைத் திறன்களை ஊக்குவிக்காத தன்மையைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. கலப்பு-கற்றல் அனுபவங்களை விமர்சிப்பவர்கள், பயிற்சி யானது மாணவர்களுக்கு போதிய

தனிப்பட்ட கவனம், வழிகாட்டுதல் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து உதவியை வழங்குமா என்று கேள்வி எழுப்பலாம், குறிப்பாக சுய-இயக்கமற்ற, சுய ஒழுக்கம் அல்லது ஒழுங்கமைக்கப்படாத மாணவர்களுக்கு, திறம்பட கற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போகுமெனக் கருதப்படுன்றது. ஆசிரியர்கள் மற்றும் பெரியவர்களின் மேற்பார்வை. எடுத்துக்காட்டாக, நேரில் மேற்பார்வை இல்லாமல், மாணவர்கள் தங்கள் பாடங்களைச் செய்வதை விட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியும் நண்பர்களுடன் அரட்டையடிப்பதிலும் தங்கள் படிப்பு நேரத்தை எளிதாகச் செலவிடலாம்.

ஒரு கலப்பு-கற்றல் சூழலமைவில் மாணவர்களுக்கு எவ்வாறு திறம்பட பயிற்றுவிப்பது என்பது குறித்து ஆசிரியர்கள் போதுமான பயிற்சி பெற்றுள்ளார்களா அல்லது பெறுவார்களா என்றும் விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர். சில கல்வியாளர்கள் கலப்பு கற்றல் என்பது பிரதேச ரீதியாக பாடசாலைகளுக்கு தொழில்நுட்பத்தை இடப்படுத்துவதன் மூலம் சாத்தியமாக்கலாம் என எண்ணுகின்றனர்.

இது ஆசிரியர் இடமாற்றங்கள், அதிக மாணவர்-ஆசிரியர் விகிதங்கள், எதிர்பாராத கல்விப் இழப்புக்கள் மற்றும் பிற சாத்தியமான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தலாம். இன்னும் சில விமர்சகர்கள் கலப்பு கற்றலை கடந்து செல்லும் கல்வி மோகம் என்றும் நிராகரிக்கலாம். பாடசாலைகளுக்கு எண்மிய கற்றல் தொகுப்புகள் மற்றும் நிகழ்நிலை கற்றல் வளங்களை விற்பனை செய்யும் இலாப நோக்குடனான நிறுவனங்களின் விரைவான பெருக்கம் மற்றொரு சிக்கலான காரணியாகும் - இது லாபம் ஈட்டும் மற்றும் குறைந்த தரம் வாய்ந்த கல்வி சேவைகள் மற்றும் தயாரிப்புகளுக்கான சாத்தியக்கூறுகள் குறித்து குறிப்பிடத் தக்க கவலைகளை எழுப்பியுள்ளது.

முற்றும்



# என் ஆசான்

- பூ.யமுனா, நடனத்துறை -

உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உள்ளன. ஒன்று தாயின் கருவறை இன்னொன்று ஆசிரியரின் வகுப்பறை. தாயின் கருவறையில் உயிரைப் பெறுகின்றான். ஆசிரியரின் வகுப்பறையில் அவன் அறிவை பெறுகின்றான். அவ்வாறே வெற்றுக்காகிதமாய் இருந்த என்னை அழகுமிகு தோரணமாய் மாற்றியவர் என் ஆசிரியர் அவர் பெயர் திருமதி. சுலைக்சனா கோகிலன் அவர் எமது பாடசாலைக்கு வருகை தரும் பொழுது நான் க.பொ.த உயர்தரத்தில் கற்றுக்கொண்டிருந்தேன். அந்த வேளையில் வரலாறு பாடத்தினை கற்பிக்க ஆசிரியர் இல்லை. அவர் எமக்கான வரலாற்றுப் பாடத்தினை சிறப்பாக கற்பித்தார்.

அவரின் கற்பித்தலின் பால் எனது ஆர்வமானது அதிகரித்தது. கற்றல் செயற்பாட்டின் பொழுது கண்டிப்பாகவும் ஏனைய நேரங்களில் தாயாகவும் பழகினார். அவரது அந்த செயற்பாடானது நானும் இவ்வாறான ஆசிரியராக வர வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கினார்.

மாணவர்களின் தவறுகளை அன்பாக, அமைதியாக, எடுத்துக் கூறி அதிலிருந்கு விடுபடவும் செய்வார். அவரின் கடுமையான கண்டிப்பு அல்லாத முறை என்னை மிகவும் கவர்ந்தது. அவர் தன்னை இக்காலத்திற்கு ஏற்றாற் போல் செதுக்குபவர் என் ஆசான்.

மாணவர்களுக்கு தேவையான கல்வியினையும், ஒழுக்கம், நேர்மை போன்ற பண்புகளையும் வழங்குவதுடன் என்னால் முடிந்தவரை மாணவரின் கல்வியை மட்டுமன்றி அவர்களது வாழ்க்கைக்கும் தேவையான விடயங்களை செய்பவர்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மாணவரது வாழ்வில் எவ்வளவு தூரம் ஒன்றிணைந்து உள்ளனர் என்பதனை என் ஆசிரியரின் பணியில் கண்டேன். என் திறமைகளை வெளிக்கொண்டு வர எனக்காய் சிந்தித்த என் ஆசிரியர் என்றும் போற்றத்தக்கவர். என்னை மட்டுமன்றி என்னைப் போன்று பலரை நல்வழிப்படுத்தும் ஆசான் கற்ற கல்லூரியில் கல்வி பயில்வதில் பெருமை அடைகின்றேன். என் ஆசிரியரின் வழியைப் பின்பற்றி நானும் செயற்படுவேன். இதுவே என் ஆசிரியருக்கு செய்யும் நன்றிக்கடன்.



# மனிதனை மனிதன் இழிவு படுத்தும் அவலநிலை அற்ற சமூகத்தை உருவாக்குவோம்

- சி .டஜானா, ஆரம்பக்கல்வியை -

ஏதோ வகையில் இன்னொருவரை விட நாம் உயர்ந்தவர்கள் என வெளிப்படுத்த நினைப்பது ஒரு சாபம்.

நான் இந்த மதத்தில் பிறந்ததால் உயர்ந்தவன், நான் இந்த மொழி பேசுவதால் உயர்ந்தவன், நான் இந்த சாதி



உயர்ந்தவன். இப்படி ஏதோ ஒரு விடயத்தை வைத்து தன்னை உயர்வாக எண்ணும் மனநிலையில் இருந்து மீண்டு வந்து பாருங்கள். உலகம் அழகாக தெரியும்.

ஒரு சமூகக்கூட்டமாக அதன் அடையாளங்களை கடத்துவது நல்லதுதான். ஆனால், அதுவே அந்த சமூகக் கூட்டத்தில் இருப்பதால் உயர்ந்தவன் என்ற போலி மாயை உருவாக்க பயன்படுவது ஆபத்தானது.

தமிழன்டா! என்பதில் எந்த பெருமையும் இல்லை. தமிழ் சமூகத்திற்காக நீங்கள் என்ன செய்தீர்கள் என்பது தான் பெருமையாக இருக்க வேண்டும்.

இந்த உயர்ச்சி மனநிலைதான் ஏதோ ஒரு வகையில் இன்னொருவரை அடிமையாக அல்லது தனக்கு கீழே வைத்திருக்க வேண்டும் என்ற ஆசையை விதைக்கிறது.

அது சமூக நீதியையும் ஆட்டிப்பார்க்கும். நாம் சமூகமாக முன்னேறாமல் போவதற்கும் அதுதான் காரணம். இங்கே ஒரு சமூகமாக முன்னேற வேண்டும் என நினைப்பவர்கள் மிகக் குறைவு. தான் முன்னேற வேண்டும் தனக்கு கீழே இருப்பவனும் முன்னேற வேண்டும் ஆனால் அவன் என்னைவிட அதிகமாக முன்னேறக்கூடாது என நினைப்பவர்களே அதிகம்.

ஒரு மிக உயர்ந்த சாதி, அதைவிட கொஞ்சம் குறைவான சாதி அதையும் விட குறைவான சாதி என வகைப்படுத்தி வைத்திருக்கும் மூன்று சாதிகளை எடுங்கள்.

இரண்டாவது சாதி, முதலாவது சாதி தங்களை குறைவாக நடத்துவதாக குறை சொல்லும். அது மாற வேண்டும் என போராடும். ஆனால் அது மூன்றாவது சாதியை குறைவாக நடத்தும். ஒட்டுமொத்தமாக எல்லோரும் சேர்ந்து சாதி வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள். காரணம், இங்கே தான் இன்னொருவரைவிட உயர்ந்தவர் எனும் அடையாளம் இல்லாமல் போய்விடும் என்ற பயம்.
இந்த பயம் ஏன் ஏற்படுகிறது?

ஒரு நீயா நானா நிகழ்ச்சி. சாதிப்பெருமை பேசுபவர்களுக்கும், பேசாதவர்களுக்குமான நிகழ்ச்சி. எங்களுக்கு சாதிப்பெருமையே வேண்டாம் என்பவர்கள் அமைதியாக பேசினார்கள். அறிவாகவும் பேசினார்கள். சாதிப்பெருமை பேசுபவர்களின் பேச்சைக்கேட்டால் சிரிப்பு சிரிப்பாக வந்தது. அவ்வளவு முட்டாள் தனமாக இருந்தது. அவர்களால் அமைதியாகக்கூட பேச முடியவில்லை.

அவர்கள் எல்லோரும் சொன்னது "நாங்க ஆண்ட பரம்பரை, ஊரில குறைந்த சாதிக்காரன் எதிரே வந்தால் வேட்டியை மடிச்சுக் கட்டுவம் அவன் தலை குனிஞ்சிட்டு போவான்" அதாவது அந்த சாதியில் பிறந்தவன் என்பதைத்தவிர வேறு எந்தக்காரணமும் இல்லை, இருந்தும் இன்னொருவன் தனக்கு மரியாதை தருகிறான் என்பதை சந்தோசமாக ஏற்றுக்கொள்கிறார்கள். சாதிப் பெருமை பேணாது விட்டால் அந்த போலி மரியாதை இல்லாமல் போய்விடும் என்ற பயம். இது எவ்வளவு கேவலமான நிலை.

இதே நிலைதான் நான் ஆண் என்பதால் மனைவி அடிபடிய வேண்டும் என நினைக்கவும் வைக்கிறது.

ஒவ்வொரு சமூக அந்தஸ்துக்கு பின்னாலும் இதே மன நிலைதான். அந்த அந்தஸ்த்தை விட்டுக்கொடுக்க யாரும் தயாரில்லை.

விட்டுக்கொடுத்து பாருங்கள் உங்கள் பிள்ளைகள் வளர நல்ல சமூகம் கிடைக்கும்.

*****

# கல்வி

*சித்திரமான இச் சொல்லுக்கு*
*சிந்தனையால் வளம் சேர்ப்போம்!*
*மாறிவரும் உலகிற்கு*
*புதியன பல நாம் படைப்போம்!*

*கைவிரல் பிடித்து நடை பழக்கி*
*மெல்ல மெல்ல மேலேற்றுவோம்!*
*உலகத்தினை செதுக்க*
*உளிகள் தனை நாம் படைப்போம்!*

*பாரதி வழி நின்று மனத்தின்மையை*
*அனைவருக்கும் தெளிப்போம்!*
*அறிவின் கூர்மையினால்*
*அற்புதம் பல செய்வோம்!*

*ஒவ்வொரு விதையும்*
*விருட்சமாக வீரியம் கொடுப்போம்!*
*மானுடம் செழிக்க*
*சுவடுகள் பதிப்போம்!*

- சு.நிவேதா, ஆரம்பக்கல்வி -

*“தனியாள் ஒருவரின் ஆளுமை அவரது தொழில் வாழ்க்கையில் மட்டுமன்றி அவரது தனிப்பட்ட வாழ்க்கையிலும் செல்வாக்குச் செலுத்தும்”*




# Big Five Pesonality Test 1

G.Gajooran, Lactuere,
Jaffna National college of Education

ஒருவரின் தனித்துவமான பண்புகளும், இயங்கியல் பண்புகளும் அவை வெளிப்படும் தோரண நடத்தைகளும் ஆளுமை எனப்படும். அந்த வகையில் இவ்வாளுமைப் பண்பானது நபருக்கு நபர் வேறுபட்டுக் காணப்படும். ஆனால் அவ்வாறான தனித்துவமான ஆளுமைப் பண்புகளை குறிப்பாக ஐந்து வகைக்குள் உள்ளடக்கலாம். அவை ஐம்பெரும் ஆளுமைப் பண்புகள் (Big Five Pesonality) என்பது உளவியல் பண்புக் கோட்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளுமை வகைப்பிரித்தல் ஆகும். இது ஒருவரின் ஆளுமைப் பண்புகளை புள்ளிவிவர ஆய்வில் இருந்து வருகிறது. காரணிப் பகுப்பாய்வு எனப்படும் நுட்பத்தைப் பயன்படுத்தி, பின்வருமாறு ஐந்து வகைக்குள் அடக்குகின்றது. (இது OCEAN அல்லது மாற்றி வரிசைப்படுத்தினால் CANOE என்று கூறப்படுகிறது) வரம்பற்ற ஆளுமை மாறிகள் இருப்பதாகத் தோன்றினாலும், பல நபர்களின் ஆளுமை பற்றிய கேள்விகளுக்கான பதில்களை விளக்கும் வகையில் ஐந்து பண்புகள் தனித்து நிற்கின்றன:

1. Openness - வெளிப்படைத் தன்மை
2. Conscientiousness - மனச்சாட்சியுள்ள தன்மை
3. Extroversion - புறநோக்குத் தன்மை
4. Agreeableness - ஏற்றுக்கொள்ளும் தன்மை
5. Neuroticism - எதிர்மறை மனவெழுச்சித் தன்மை

இச் சோதனையானது ஐம்பது வினாக்களைக் கொண்டுள்ளது, அவை ஐந்து புள்ளி அளவுகோலில் மதிப்பிடப்படும். ஆய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபரிடம் இவ் வினாக் கொத்தைக் கொடுத்து பின்வருமாறு புள்ளியிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| Disagree | - உடன்படவில்லை | - 1 |
| Slightly disagree | - குறைவாக உடன்படவில்லை | - 2 |
| Neutral | - நடுநிலை | - 3 |
| Slightly agree | - குறைவாக ஏற்றுக்கொள்கின்றேன் | - 4 |
| Agree | - ஏற்றுக்கொள்கின்றேன் | - 5 |

பகுப்பாய்வினை SPSS போன்ற மென்பொருள் மூலமாகவோ, நிகழ்நிலையிலோ அல்லது Manual ஆகவும் செய்து கொள்ள முடியும்.

## Big Five Personality Test இற்கான 50 வினாக்கள்

1. நான் இந்த சமூகத்தில் முக்கியமான ஒருவன்.
2. நான் மற்றவர்கள் பற்றி சிறிது கரிசனை கொண்டுள்ளேன்.
3. நான் எப்போதும் தயாராய் இருக்கிறேன்.
4. நான் எளிதில் மன அழுத்தத்திற்கு ஆளாகிறேன்.
5. நான் வளமான சொற் களஞ்சியத்தைக் கொண்டிருக்கிறேன்.
6. நான் அதிகம் பேசுவதில்லை.
7. நான் மக்கள் மீது விருப்பம் கொண்டிருக்கிறேன்.
8. நான் எனது உடமைகளை ஆங்காங்கே விட்டு விடுகிறேன்.
9. நான் பெரும்பாலான நேரங்களில் நிம்மதியாக இருக்கின்றேன்.
10. நான் சுருக்க உத்திகளைப் (abstract ideas) புரிந்து கொள்வதில் சிரமப்படுகிறேன்.
11. நான் மக்களுக்கு மத்தியில் இருக்கையில் வசதியாக உணர்கிறேன்.
12. நான் மக்களை அவமதிக்கிறேன்.
13. நான் விபரங்களில் கவனம் செலுத்துகிறேன்.
14. நான் செயல்களுக்காக கவலைப்படுகிறேன்.
15. நான் ஒளிமயமான கற்பனைத்திறன் கொண்டிருக்கிறேன்.
16. நான் பின்னணியைக் கொண்டிருக்கின்றேன்
17. மற்றவர்களின் உணர்வுகளுக்கு நான் அனுதாபம் காட்டுகின்றேன்.
18. நான் செயல்பாடுகளில் குழப்பம் அடைகிறேன்.
19. நான் எப்போதாவது மகிழ்ச்சியற்று உணர்கிறேன்.
20. எனக்குக் சுருக்க உத்திகளில் விருப்பம் இல்லை.
21. நான் உரையாடல்களைத் தொடக்குகின்றேன்.
22. எனக்கு மற்றவர்களின் பிரச்சினைகளில் ஆர்வம் இல்லை
23. நான் எனது அன்றாட வேலைகளை சரியான வழியில் செய்கின்றேன்.
24. நான் எளிதில் குழப்பமடைகிறேன்.
25. நான் அருமையான உத்திகள் கொண்டிருக்கிறேன்.
26. நான் குறைவாகவே சொல்லுகின்றேன்.
27. எனக்கு மென்மையான இதயம்.
28. நான் அடிக்கடி பொருட்களை உரிய இடத்தில் வைக்க மறந்து விடுகிறேன்.
29. நான் எளிதில் குழப்பமடைகிறேன்.
30. எனக்கு நல்ல கற்பனைத்திறன் இல்லை.
31. நான் விருந்துகளில் அதிக மாறுபட்ட மனிதர்களுடன் பேசுகிறேன்.
32. எனக்கு உண்மையில் மற்றவர்கள் மீது ஆர்வம் இல்லை
33. நான் கட்டளையிடுவதை விரும்புகிறேன்.
34. நான் என் மனநிலையை அதிகம் மாற்றிக்கொள்கிறேன்.
35. நான் விடயங்களை விரைவாகப் புரிந்துகொள்கின்றேன்.
36. நானே என்மீதான கவனத்தை ஈர்க்க விரும்பவில்லை
37. நான் மற்றவர்களுக்காக நேரம் ஒதுக்குகின்றேன்.
38. நான் எனது கடமைகளைத் தட்டிக்கழிக்கின்றேன்.
39. எனது மனநிலை அடிக்கடி மாறுகின்றது.
40. நான் சிரமமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறேன்.
41. நான் மையக் கவனமாக இருப்பது குறித்து எனக்குக் கவலை இல்லை.
42. நான் மற்றவர்களின் உணர்ச்சிகளை உணர்கிறேன்.
43. நான் கால அட்டவணையைப் பின்பற்றுகிறேன்.
44. நான் சுலபமாக எரிச்சலடைந்துவிடுகிறேன்.
45. நான் செயலின் பிரதிபலிப்பில் நேரத்தைச் செலவிடுகிறேன்.
46. நான் அறியாத நபர்களின் மத்தியில் அமைதியாக இருப்பேன்.
47. நான் மக்களை நிம்மதியாக உணரவைக்கின்றேன்.
48. நான் எனது வேலையில் துல்லியமாக இருக்கிறேன்.
49. நான் அடிக்கடி மகிழ்ச்சியற்று உணர்கிறேன்.
50. நான் உத்திகள் நிறைந்தவன்.

Big Five Personality Test மேற்கொள்ளும் முறை மற்றும் பகுப்பாய்வு செய்தல் பற்றி அடுத்த இதழில் தொடரும்...

# ஆசிரியர் தலைமைத்துவம்

- ஜெ அபர்ணா, நடனத்துறை -

நல்ல தலைவர்களை மக்கள் மதிக்கின்றனர். மக்கள் விருப்புடன் வரவேற்கின்றனர். மனித வாழ்வின் பல மாற்றங்கள் தலைவர்களாலும் அவர்களின் தலைமைத்துவ சிந்தனைகளாலும் ஏற்படுத்தப்பட்டதாகும். சிறப்பான தலைமைத்துவத்தின் நிழலில் சிறப்பான பெறு பேறுகள் வெளியாகுகின்றன. குறிப்பிட்ட அல்லது நிர்ணயிக் கப்பட்ட இலக்குகள் வெற்றிகரமாக அடையப் படுகின்றன.

ஆசிரியர்கள் அவர்களது மாணவர்களால் தலைவர் களாகவே கருதப்படுகின்றனர். மாணவர்கள் கற்றலின் இலக்குகளை அடையவும், வகுப்பறையில் உடன்பாடான வினைத்திறன் மிகு உறவு நிலையினை மாணவர்களி டையே கட்டி எழுப்பவும் ஆசிரியர்கள் தலைவர்களாக பணியாற்ற வேண்டி உள்ளது.

வகுப்பறையில் மாணவர்கள் தனித்தனியாகவும் குழு நிலையிலும் கற்றல் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். மாணவர்களின் கற்றல் செற்பாடுகளை திட்டமிட்டு ஒழுங்கு ப்படுத்தி நெறிப்படுத்தி கற்றலில் வெற்றி அடைவதற்கான உத்திகளையும் திட்டங்களையும் வழங்குவதில் ஆசிரியர் பணி மகத்தானது ஆகும்.

தலைவர்கள் எப்போதும் தொலைநோக்குக் கொண்டவ ர்களாகவும், வகுக்கப்பட்ட இலக்கு நோக்கி தமது அங்கத்தவர்களையும் அழைத்துச் செல்வதில் அர்ப்பணிப் பும் அக்கறையும் உடையவர்களாகவும், நெகிழ்ச்சியை பேணுபவர்களாகவும், தமது அங்கத்தவர்களின் நலன்கள் மீது எப்போதும் பொறுப்புடையவர்களாகவும் இருப்பர். இத்தகைய தலைமைத்துவத்தின் பண்புகளை ஆசிரியரும் கொண்டிருக்க வேண்டியவராக இருக்கின்றார்.

ஆசிரியர்கள் நல்ல தலைவர்களாக மிர்வதற்கு பின்வ ரும் தலைமைத்துவ கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அவையாவன

- ஆசிரியர்கள் தன்னைத்தானே நன்கு விளங்கிக் கொண்ட வர்களாக இருத்தல்.
- ஆசிரியர் நுட்பங்கள் சார்ந்த வல்லுனராக இருத்தல்.
- தனது செயற்பாடுகளுக்கு தானே பொறுப் பேற்றல்.
- சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுத்தல்.
- முன்மாதிரி நடத்தைகளால் மாணவர்களைப் பொருத்தப் பாடு அடையச்செய்தல்.
- மாணவர்களின் நலன்கள் மீது அக்கறையுடன் இருத்தல்.
- மாணவர்கள் தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டவர்க ளாக இருத்தல்.
- மாணவர்களை பொறுப்பேற்கச் செய்தல்.
- மாணவர்கள் இணைந்து செயல்பட வழிகாட்டுதல்.
- மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கான தலைமைத்துவம்.
- வழிகாட்டல் நம்பிக்கையை உருவாக்குபவர்.
- பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்குதல்.

ஆசிரியர் தலைமைத்துவம் என்பது தூய்மையானதா கவும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு சிக்கனமான வழி முறைகளின் ஊடாக தரமான வெளியீடுகளை உருவாக்கத் தன்னைச் சார்ந்த மாணவர் குழுவினரின் மீது நேர்நிலை யில் செல்வாக்கு செலுத்துவதனைக் குறிக்கின்றது.

**“கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே”**

## வன்முறையற்ற தொடர்பாடல்

கருவறை முதல் கல்லறை வரை
எம்மை இணைத்திடும் பாலமாய்
ஊடகங்கள் வாயிலாய் - எம்
உணர்வை வெளிக்கொணர்ந்திட

பல்கிளையாய் பிரிந்து
உலகெங்கும் வியாபிக்க
பல துறைகளிலும் பெருகி
வளர்ச்சி கண்டனவே இந்நாளில்

புரிதலிற்கு எடுத்துக்காட்டாய்
வணிகத்தின் வெற்றிக்கு
வினைத்திறனாய் உதவிடுமே
தேவையை பூர்த்தி செய்திடுமே

அக அமைதி சமத்துவம் கொண்டோராய்
இனிமையான சொல்லாற்றலால்
முரண்பாடற்ற ஆளுமை கொண்டு
மனிதர் மனதை வென்றிடுவோம்

தலைமைத்துவ பண்பின் முதன்மையாய்
தகவலை சிறப்பாய் பரிமாறிட
எழுத்து,வாய்மொழி,சமிஞ்சை வாயிலாய்
உறவு சமநிலை பேணிடுவோமே

**- க.லூட்ஸ் றனுஷா, ஆரம்பக்கல்வி -**

## அடையத்துடிக்காதே குறிக்கோளாக்கி முயற்சி

*நமக்கு பிடித்த மான ஒன்றினை
நமதாக்க வேண்டும்
என்பதைத்தாண்டி
எனது எண்ணவோட்டம்
இயன்றவரை இயல்பாக
அதைநோக்கியதே என்பதில்
அலாதியான வெற்றி
எனக்கானதை தக்க வைத்தல்
என சிந்திப்பதை விடுத்து
உனக்கானதெனக்கருதுவதை
உள்ளார்ந்து நேசிக்க
கற்றுக்கொள் உன்
நேசம் உனக்கானதை
உன்னிடம் கொணர்ந்து
சேர்க்கும் அவ்வாறு
வந்தடையவில்லை என்றால்
அது உனக்குரியது அல்ல
அவ்வளவே...!*


- சி.டஜானா,
ஆரம்பக்கல்வித்துறை -

# "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 15

## கதைகளால் நியமாகி...



### தேவதையும் அவளே, சூனியக்காரியும் அவளே!



இரு அரசர்க்கிடையே போர் நடக்கிறது. அதில் ஓர் அரசன் தோற்று விடுகிறான். "நான் உன்னை விடுதலை செய் கிறேன் அதற்கு நீ ஒரு காரியம் செய்யவேண்டும். நான் கேட்கும் கேள்விக்கு நீ பதில் சொல்ல வேண்டும்'' என்றான். நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னிடம் "ஒரு பெண் ஆழ் மனதில் என்ன நினைக் கிறாள் என்பதை சரியாக கண்டு பிடித்து சொல்லிவிடு நான் உன்னைத் திருமணம் செய்கி றேன் என்று சொல்கிறாள். இதற்கு நீ சரியான பதிலை சொன்னால், உன்னை விட்டுவிடுகிறேன்'' என்கிறான். தோற்றுப்போன மன்னன் அதற்கு சம்மதித்து அதற்கு பதில்தேடி அலைகிறான். அப்போது ஒருவன் சொல்கிறான் "ஒரு சூனியக்கார கிழவியிருக்கிறாள் அவளுக்கு எல்லாம் தெரியும்'' என்று.

அவன் சூனியக்கார கிழவியை சந்தித்து கேட்டான் "ஒரு பெண் ஆழ்மனதில் என்ன நினைக்கிறாள்?'' என்று. "இதற்கு பதில் சொல்லிவிடுவேன் ஆனால் அதில் ஒரு சிக்கலிருக்கின்றது நான் பதில் சொன்னால் மன்னன் காதலியை திருமணம் செய்வான் நீ விடுதலை அடைவாய் எனக்கு என்ன கிடைக்கும்?" என்று கேட்டாள் சூனியக் காரகிழவி. அவன் அவசரமாக எதுவும்யோசிக்காமல் "நீ எதைக் கேட்கிறாயோ அதைத்தருகிறேன்" என்றான். சூனியக்காரக்கிழவி சொன்னாள் "ஒரு பெண் எப்போதுமே தான் சம்மந்தப்பட்ட விடயத்தில் தானே முடிவெடுக்க வேண்டும் என்று நினைக்கிறாள்" என்று.

அரசனிடம் இதைகூற, காதலியிதை ஏற்க அவர்களு க்கு திருமணம் நடக்கிறது. இவனுக்கு விடுதலை கிடைக் கிறது. விடுதலை பெற்ற அரசன் சூனியக்காரகிழவியை தேடி செல்கிறான். நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்கிறான். நீ என்னை திருமணம் செய்யவேண்டும் என்கிறாள். அவன் திடுக்கிடுகிறான். சொன்ன வாக்கை காப்பாற்ற சம்மதிக்கிறான். அடுத்தநாள் மாலையோடு இதே நேரத்திற்கு இங்கே வா நான் காத்திருப்பேன், என்கிறாள் அவள்.



மாலையோடு அவளை தேடி செல்கிறான் அந்த மன்னன். அங்கே ஒரு அழகான தேவதை அமர்ந்திருக்கிறாள். அவன் கேட்கிறான் “எங்கே அந்த சூனியக்காரக்கிழவி?” என்று அவள் சொல்கிறாள் நான் தான் அந்த சூனியக்காரக் கிழவி நான் எப்படிவேண்டு மென்றாலும் இருப்பேன். உனக்கு இப்போது ஒரு சோதனை நான் உன்னை திருமணம் செய்தபின் உன் னோடு பகல் முழுவதும் தேவதையாகவும் இரவு முழுவதும் உன்னோடு தனிமையிலிருக்கும்போது சூனியக் காரக் கிழவியாக இருந்து உன் கழுத்தையறுப்பதா, அல்லது பகல் முழுவதும் சூனியக்காரக் கிழவியாகவும் இரவில் உன்னோடு தனிமையில் இருக்கும்போது தேவதை யாகவிருப்பதா கூறு என்றாள்.”

சற்றும் யோசிக்காமல் அவன் சொன்னான் “இது உன்சம்மந்தப்பட்ட விசயம் நீதான் முடிவெடுக்கவேண்டும்” என்று.


தேவதை சொன்னாள் “எப்போது முடிவு எடுப்பதை என்னிடம் விட்டாயோ அப்போதே நான் எப்போதும் தேவதையாக இருப்பதாக முடிவுசெய்துவிட்டேன்.”

தன் விடயத்தில் தானே முடிவெடுக்கும்போது தேவதை யாகிறாள். முடிவு திணிக்கப்படும்போது சூனியக்கார கிழவி யாகிறாள். வீடு சொர்கமாவதும் நரகமாவதும் உங்கள் கையில்.

**நீதி : தன்சம்பந்தப்பட்ட முடிவுகளைப் பெண் தானே எடுக்கவேண்டும்**

# பல்துறைகளில் இவள் முதல் பெண்

- ரொசானி சிங்கராசா -



**இலங்கையின் முதல் பெண் நீதிபதி**

**சிவகாமசுந்தரி அருச்சுனா**



**இலங்கையின் முதல் பெண் சரித்தர நாவலாசிரியை**

**‘திக்கம்’ சிவயோகமலர்**



**இலங்கையின் முதல் பெண் பொருளியலாளர்**

**பிரமிளா சிவப்பிரகாசப்பிள்ளை சிவசேகரம்**



உலகின் முதல் பெண் பிரதமர்
ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க



இந்தியாவின் முதல் பெண் நீதிபதி
அன்னா சாண்டி



இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதி
சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க



இந்தியாவின் முதல் பெண் ஆசிரியை
சாவித்ரி பாய் பூலே



இலங்கையின் முதல் பெண் பிரதம நீதியரசர்
சிராணி பண்டாரநாயக்க



இந்தியாவின் முதல் பெண் விண்வெளி வீராங்கனை
கல்பனா சாவ்லா



இந்தியாவின் முதல் பெண்
பத்திரிகையாளர்
**சுவர்ணகுமாரி தேவி**



இந்தியாவின் முதல் பெண் ரயில்
ஓட்டுநர்
**சுரேகா சங்கர் யாதவ்**



இந்தியாவின் முதல் பெண்
பொறியியலாளர்
**லலிதா**



புக்கர் விருது பெற்ற இந்தியாவின்
முதல் பெண் எழுத்தாளர்
**அருந்ததி ராய்**



இந்தியாவின் முதல் பெண்
வழக்கறிஞர்
**கார்னிலியா சொராப்ஜி**



இந்தியாவின் முதல் பெண்
மருத்துவர்
**ஆனந்தபாய் ஜோஷி**

# ஆசிரியரின் வகைகள்

**- A.Anet - Art Course -**

இன்றைய ஆசிரியர் உலகில் பண்பு ஆசிரியர், பழக்க ஆசிரியர், பதவி ஆசிரியர்கள் சேவையில் உள்ளனர். இவர்களை அசல், நகல், போலி எனும் பிரிவுகளில் அடக்கலாம். பின்வரும் பண்புத் தொகுதிகளில் சுமார் 15 பண்புகளை எத்தொகுதிகளில் ஓர் ஆசிரியர் பெறுகின்றாறோ அவர் இவ்வகை ஆசிரியர் ஆவார். ஒவ்வொரு ஆசிரியரும் மனசாட்சிபபடி அடையாளமிட்டு தம்மை வளர்த்துக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும் இவ்வட்டவணை உதவக்கூடியது.

| அசல் ஆசிரியர் | நகல் ஆசிரியர் | போலி ஆசிரியர் |
|---|---|---|
| தொழில் பற்று | தொழில் விரக்தி | தொழில் வெறுப்பு |
| முகமலர்ச்சி | முகம் சலிப்பு | முகம் கடுப்பு |
| நேர்த்தியான ஆடை | பொருத்தமற்ற ஆடை | கவர்ச்சியான ஆடை |
| நேரிய பார்வை | இலக்கற்ற பார்வை | தவறான பார்வை |
| அளந்த பேச்சு | குறைந்த பேச்சு | வள வளப் பேச்சு |
| வளமான குரல் | அலறல் குரல் | தெளிவற்ற குரல் |
| இருபால் உறவாடல் | தன்பால் உறவாடல் | எதிர் பால் உறவாடல் |
| சொல் வளம் | சொல் மயக்கம் | சொல் பஞ்சம் |
| தொடர்ந்து கற்றல் | கற்றல் தேக்கம் | கற்றல் மறத்தல் |
| சிந்தனைத் தெளிவு | சிந்தனை சலனம் | சிந்தனையின்மை |
| தேவைக்கு லீவு | கணித்த லீவு | மேலதிக லீவு |
| நிறை காணல் | குறை நிறை காணல் | குறையே காணல் |
| பிழையை ஏற்றல் | பிழையை மறுத்தல் | பிழையைச் சரியெனல் |
| ஊலாவிக்கற்பித்தல் | நின்று கற்பித்தல் | இருந்து கற்பித்தல் |
| வகுப்பு ஆளுமை | வகுப்பில் கவனமின்மை | வகுப்பு அமைதியின்மை |
| பணிப்புரை ஏற்றல் | பணிப்புரை நழுவுதல் | பணிப்புரை மறுத்தல் |

| அசல் ஆசிரியர் | நகல் ஆசிரியர் | போலி ஆசிரியர் |
|---|---|---|
| நடுநிலைச்சார்பு | பக்கச்சார்பு | சுயநலச்சார்பு |
| சுயமான இயக்கம் | பிறரால் இயக்கம் | இயக்கமின்மை |
| சேவை நோக்கம் | வருமான நோக்கம் | ஓய்வு நோக்கம் |
| ஒத்துப்போதல் | ஒத்துழையாது தவிர்த்தல் | எதிர்ப்புக்குழு அமைத்தல் |
| முந்தி வந்து பிந்தி போதல் | நேரத்திற்கு வந்து போதல் | பிந்தி வந்து முந்தி போதல் |
| கருப்பொருள் அறிந்து கற்பித்தல் | கருப்பொள் அறியாது கற்பித்தல் | கருப்பொருள் மாற்றி கற்பித்தல் |
| ஆறியாததை அறிந்து கற்பித்தல் | அறியாததைத் தவிர்த்தல் | ஆறியாததை கற்பித்தல் |
| பிரச்சினைகளை உடனடியாக தீர்த்தல் | வகுப்பறையில் விமர்சித்தல் | வெளியாரிடம் விமர்சித்தல் |
| கற்பித்தலும் பொது வேலைகளும் | கற்பித்தல் மட்டும் | சுய வேலைகள் மட்டும் |
| நிர்வாகத்திற்கு உதவுதல. | நிர்வாகத்தை விமர்சித்தல | நிர்வாகத்தை குழப்புதல் |
| மாணவரில் சம கவனிப்பு | ஒரு சிலரில் கவனிப்பு | வேண்டியவரில் மட்டும் கவனிப்பு |
| தேடிக்கற்பித்தல் | இருப்பதை கற்பித்தல் | இருப்பதையும் கற்பிக்காமை |

**கற்றலை கற்போருக்கு கரும்பாக்க வல்ல கற்றல் வழி தேர்ந்தவனே ஆசான்.**

மனிதர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை அதற்கென அளிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் சரியாகவும், ஆத்மார்த்தமான ஈடுப்பாட்டுடனும், விருப்புடனும் நிறைவேற்றினால் இறைவனும் அதற்குரிய பலன்களை எவரது சிபார்சும் இன்றி வழங்குவார்.

3

# எனது மகள் உயிரோடு இருப்பதை விட மரணிப்பதே நல்லது

*ஒரு வைத்தியரின் அனுபவ பகிர்வை கதையாக்கி பகிர்கிறேன்*

**- சி.டஜானா, ஆரம்பபிரிவு -**

ஒரு மணித்தியாலயம் செல்லவில்லை எனது போன் ரிங் செய்தது. மீண்டும் ETU இல் இருந்து என்னை அவசரமாக வருமாறு அழைப்பு. நான் அங்கே போன போது அந்த யுவதியின் இதயம் தாறு மாறாக இயங்குவதாகவும், ECG இல் Ventricular Tachycardயை இருப்பதாகவும் உடனடியாக கரண்ட் சொக் (Cardiac Defibrillation) கொடுக்கப்போவதாகவும் கூறி உடனடியாக வழங்கப்பட்டது (இது ectasy போதை மருந்தால் ஏற்படும் உயிரைப் போக்கக் கூடிய மிக மோசமான விளைவாகும்.) அவருடைய ப்ரசர் குறைவடைந்ததால் அதற்குரிய மருந்துகளும், செயற்கை சுவாசம் வழங்குவதற்கு அதற்குரிய ஏற்பாடுகளும் உடனடியாக செய்யப்பட்டன. பல தடவை கரண்ட் சொக் செய்தும் இதயம் தனது பழைய நிலைமைக்கு வர மறுத்தது. வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்களும் இந்த உயிரை எப்படியும் காப்பாற்றி விட வேண்டும் என்ற நோக்கில் போராடிக்



கொண்டிருந்தார்கள். என்ன செய்வது இறைவனின் நியதியை மாற்ற முடியுமா, பல மணி நேர போராட்டத்தின் பின் அந்த யுவதி இறந்ததை மருத்துவ குழாம் உறுதி செய்தது.

எனது மருத்துவ வாழ்நாளில் கண்ட மரணங்களில் மிக மோசமான மரணமாக இது ஒன்றைக் குறிப்பிடலாம்.

எனது அன்பு மாணவச்செல்வங்களே, இளைஞர் யுவதிகளே, போதைப்பொருளுக்கு அடிமையான யாரும் இந்த உலகில் நல்ல நிலைமையை அடைந்ததாகவோ நல்ல பெயர் பெற்றதாகவோ சரித்திரம் இல்லை. எத்தனையோ கழுகுகள் உங்களை இந்த மோசமான பழக்கத்திற்கு அடிமையாக்கி பணம் சம்பாதிக்க வேண்டும் என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இப்படியான மோசமானவர்கள் உங்களை நெருங்கும் போது விலகி ஓடிவிடுங்கள். இல்லாவிட்டால் இந்த கழுகுகள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காவு கொல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை. ஆரம்பத்தில் ஒரு தடவை உள்ளெடுத்துப் பார்ப்போம் என்று ஆசைப்பட்டவர்கள்தான் இன்று மிகப் பெரிய போதை வஸ்து பாவனையாளர்களாக மாறி அதிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கிறார்கள். இந்த போதைப் பொருளுக்கு அடிமையானால் உங்கள் எதிர்காலம் ஏன் உங்கள் உயிருக்குக் கூட உத்தரவாதமில்லை என்பதைத்தான் நான் மேலே சொன்ன சம்பவம் உணர்த்துகிறது.

அன்பின் பெற்றோர்களே, உங்கள் குழந்தைகள் நல்லவர்கள்தான், ஆனால் அவர்களை வேட்டையாடுவதற்கு பல பிணந்தின்னி கழுகுகள் அலைந்து கொண்டிருக்கின்றன. உங்களது பிள்ளைகளை கவனமாக அவதானியுங்கள். அவர்களுடன் அன்பாகப்பழகி அவர்களின் மனதில் இடம் பிடியுங்கள். உங்களிடம் அவர்கள் எதிர்பார்ப்பது உங்களது அரவணைப்பையும் உங்களின் நேரத்தையும்தான், உங்களது காசையோ சொத்தையோ அல்ல. அவர்களை மோசமான விடயங்களில் இருந்து தவிர்ந்து வாழ வழிகாட்டுவது உங்களது தலையாய கடமை என்பதை மறந்து விடாதீர்கள்.

இவ்வாறான மோசமான போதைவஸ்து பாவனைகளில் இருந்து நாமும் நமது சமூகத்தைத் தவிர்ந்து வாழ வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உடையவர்களாவோம்.




## மனிதம்

ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தால் பல
உயிர்களைக் காக்க எழுந்து நின்றவன்!
பூமாதேவியின் பூகம்பத்தால் சின்னஞ்சிறு
பிஞ்சுகளை மீட்கத் தோல் கொடுத்தவன்!

விழிகளில் ஆறாய் வழிந்தோடும் கண்ணீரைத்
துடைக்க ஓடோடி வந்து கரங்களையும் தன்
உணர்வுகளையும் கொடுத்தவன்!
நிறம் மதம் பாராமல் இனம் மொழி பாராமல்
தோழனாய் எல்லையற்ற உறவுகளாய் கை
கொடுத்தவன்!

வையகம் போற்றும் தலைமகனாயினும் பாமர
குடிமகனாயினும் அனைவரையும் பாரபட்சமின்றி
ஒற்றுமையாக்கிய மகாத்மா இவன்!
பூவுலகில் பிறந்த ஒவ்வொருவரும் முதலில்
உச்சரிக்கும் சொல் 'அம்மா'.. ..
அவ்வாறு இருப்பதனால் தான் என்னவோ..
அன்புக்கு மறுபெயர் மனிதம் என்றானதோ?

- பூ.மதுபிரியா, இசைத்துறை -

# Check your self

- K.Thaadchayani, English Course -

At that time Mrs. Sharma was in the bathroom. She was washing clothes. She hurriedly came out and very politely said, "Hello, Mrs. Arora Why did you take all the trouble of coming here. You should have called me. I'm really very sorry for Sonu's behaviour. I'll punish him. Besides, I'll teach him to treat the children



in the neighbourhood as if they were his own brothers and sisters."

Mrs. Sharma called out to Sonu and said, "Sonu, you behaved very badly today. Why did you call Gagan names and why did you pluck their flowers ?"

"Mamma," Sonu tried to justify his behaviour, "Gagan wasn't letting me pluck flowers. But, you know, I like flowers very much."

"Look here, Sonu," Mrs. Sharma said, "a neighbour's house should be regarded as our own. We should never spoil its beauty. We should help them to maintain its beauty.

"Flowers are beautiful to look at. They add to the beauty of the house. So we should never pluck them.


"You called Gagan names. You are at fault. You should not quarrel with the children in your neighbourhood. You should not call them names. If you do such bad things, they won't play with you. Then where will you go to play, and who will you play with?



"Now go to Gagan and her mother. Feel sorry for your bad behaviour. Assure them that you won't do such things again."

"Sonu realized his mistake. He said, "I am very sorry, Mamma. Please forgive me. I'll go to Gagan and make friendship with him. I'll ask for forgiveness from him and his mother. In future I won't call anybody names. I won't quarrel with anyone. I'll be a good friend to everybody.

# பேசும் படங்கள்...!



- M.A.Fathima Ifama, ICT Course -

